10

# சங்க இலக்கியங்களில் தகவல் தொடர்பு மேலாண்மை

**முனைவர் கி.துர்காதேவி,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

வேல்ஸ் உயர் ஆ ராய்ச்சி நிறுவனம்,

பல்லாவரம், சென்னை -117,

kdurgadevi.sl@vistas.ac.in

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியங்கள், அக்கால சமூகத்தின் தகவல் பரிமாற்ற முறைகள், செய்தி மேலாண்மை, நெறிமுறை சார்ந்த தொடர்பு ஆகியவற்றைத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. சங்க இலக்கியங்களில் காணப்படும் தகவல் தொடர்பு முறைகளை அடையாளம் காணுதலும் தகவல் பரிமாற்றத்தில் மனித உறவுகளின் மேலாண்மை எவ்வாறு கையாளப்பட்டது என்பதைக் காணுதலும் நோக்கமாகக் கொண்டு சங்க இலக்கியங்களில் தகவல் தொடர்பு மேலாண்மை என்னும் தலைப்பில் இந்த ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்**

1. சங்க கால சமூகமும் தகவல் தொடர்பும்
2. இலக்கியங்களில் தகவல் தொடர்பு மேலாண்மை
3. ஆற்றுப்படையும் தகவல் தொடர்பும்
4. நவீன தகவல் தொடர்பு மேலாண்மையுடன் சங்க இலக்கியக் கருத்துக்களை ஒப்பிடுதல்

**முன்னுரை**

(Information Communication Management) என்பது நவீன நிர்வாக அறிவியலில் மையக் கருத்தாக விளங்கினாலும், அதன் அடிப்படைச் சிந்தனைகள் பண்டைய சமூகங்களிலேயே உருவாகியுள்ளன. தகவல்களைச் சரியான முறையில் பரிமாறுதல், பாதுகாத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் சமூகத் தேவைக்கேற்ப பயன்படுத்துதல் ஆகிய செயல்முறைகளே தகவல் தொடர்பு மேலாண்மை (Information Communication Management) ஆகும். மனித சமூகத்தின் வளர்ச்சியில் தகவல் தொடர்பு (Communication) மிக முக்கியப் பங்கு வகிக்கிறது சங்க கால தகவல் மேலாண்மைச் சிந்தனைகள் நவீன தகவல் தொடர்புக்கோட்பாடுகளின் முன்னோடிகளாக விளங்குகின்றன.

**சங்க கால சமூகமும் தகவல் தொடர்பு கட்டமைப்பும்**

சங்க கால சமூகம் வாய்மொழி மரபை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், தகவல் பரிமாற்றம் திட்டமிட்ட கட்டமைப்புடன் நிகழ்ந்தது. தகவல் யார் மூலம், எப்போது, எவ்வாறு, எதற்காக பரிமாறப்பட வேண்டும் என்பதில் சமூகக் கட்டுப்பாடுகள் இருந்தன. இது மேலாண்மைச் சிந்தனையின் தெளிவான வெளிப்பாடாகும்.

**இலக்கியங்களில் தகவல் தொடர்பு மேலாண்மை**

இலக்கியங்களில் அக இலக்கியம், புற இலக்கியம் எனப் பார்க்கையில் அக இலக்கியங்களான அகத்திணை இலக்கியங்கள் (குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு) காதல் வாழ்க்கையை மையமாகக் கொண்டு அமைந்தவை. இதில் தகவல் தொடர்பு மிக நுட்பமாகவும், மறைமுகமாகவும் கையாளப்படுகிறது.

தலைவன் தலைவி உறவில் தோழி ஒரு தகவல் மேலாளராக செயல்படுகிறாள் தலைவியின் உணர்வுகளைத் தலைவனிடம் தெரிவித்தலும் தலைவனின் நோக்கத்தை மதிப்பீடு செய்து தகவலைத் தலைவிக்கு எடுத்துரைத்தலும்

தவறான தகவல் பரிமாற்றத்தைத் தவிர்த்தலும் தோழியின் தகவல் பரிமாற்ற மேலாண்மையை வெளிப்படுத்துகின்றன.

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட் செவ்வியை ஆகுமதி
யார் அஃ தறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே. (குறுந்தொகை. 18.)

கபிலரின் இப்பாடலில், தலைவன் இரவில் தலைவியைச் சந்தித்து விட்டு மீண்டும் வருவதாகச் சொல்லி பிரிகிறான். அவனின் வருகை தாமதமானால், தலைவியின் உயிரே ஆபத்தில் விழும் நிலை உள்ளது. அதை உணர்ந்த தோழி, தலைவனிடம் உரையாடுகிறாள்.

இங்கு தோழியின் தகவல் தேர்வு (Information Filtering), உணர்வு மேலாண்மை (Emotional Regulation) மற்றும் அபாய மேலாண்மை (Risk Management) போன்றவை நவீன மேலாண்மைச் சொற்களுக்கு அடித்தளமாக அமைகின்றன.

மற்றொரு குறுந்தொகைப் பாடலில் தன் மகள் எவ்வாறு இல்லறம் நடத்துகிறாள் என அறிய விரும்பிய நற்றாய்க்கு உரைத்த செவிலித்தாயின் கூற்று

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே.

(குறுந்தொகை. பா.167)

தலைவியின் இல்லத்திற்குச் சென்று அவளின் இல்லற மேன்மையைப் பார்த்து வந்த செவிலித்தாய் நற்றாய்க்கு உரைப்பதாக கூடலூர் கிழாரின் இப்பாடல் அமைந்துள்ளது.

மலர், பருவநிலை, பறவை, நிலம் போன்ற இயற்கைச் சின்னங்கள் தகவல் தொடர்பு ஊடகங்களாகப் பயன்பட்டன

இது தகவலை பாதுகாப்பாகவும் சமூக நெறிமுறைகளுக்கு உட்பட்டும் பரிமாற உதவியது.

புறத்திணை இலக்கியங்கள் என்று பார்க்கையில் புறநானூறு, பதிற்றுப்பத்து) அரசியல், போர், சமூக ஒழுக்கம் போன்றவற்றை மையமாகக் கொண்டு விளங்குவதால் தகவல் பரிமாற்றத்திற்கானத் தேவை இன்றியமையாததாகிறது.

சிற்றில் நற்றூண் பற்றி, நின்மகன்
யாண்டுளனோ? என வினவுதி; என்மகன்
யாண்டுளன் ஆயினும் அறியேன்; ஒரும்
புலிசேர்ந்து போகிய கல்அளை போல,
ஈன்ற வயிறோ இதுவே;
தோன்றுவன் மாதோ, போர்க்களத்தானே!

(புறநானூறு. பா. 86)

காவற்பெண்டுவின் இப்பாடலில், தன் மகன் எங்கே என்று கேட்ட பெண்ணிடம், "அவன் எங்கே இருக்கிறான் என்று எனக்குத் தெரியாது (போர்க்களத்தில் இருப்பான்). ஆனால், புலி தங்கிச் சென்ற குகை (கல் அளை) போல, அவனைப் பெற்றெடுத்த வயிறு இதோ இருக்கிறது. அவன் கண்டிப்பாகப் போர்க்களத்தில் இருப்பான்" என்று தாய் தன் மகனின் வீரத்தைப் பறைசாற்றுகிறாள்.

அரசர்களுக்கிடையே தூதர்கள் மூலம் தகவல் பரிமாற்றம் நடத்தப்பட்டது. அவ்வாறு தூது செல்லும் தூதரிடம் சொல் தெளிவு, உண்மைத் தகவல் வழங்கல், அரசியல் நுட்பம் ஆகியவை தகவல் தொடர்பு மேலாண்மையின் அடிப்படைகளாக விளங்குகின.

போர்க்களத்தில் தகவல் தாமதம் அல்லது தவறான தகவல் பேரழிவை ஏற்படுத்தும். இதை உணர்ந்த சங்க கால சமூகம், உளவாளர்கள், செய்தியாளர்கள் மூலம் தகவல்களைச் சரியாக மேலாண்மை செய்தது. மக்களின் பாதுகாப்பின் பொருட்டு போர்ச் செய்தி தகவலாக அறிவிக்கப்பட்டது.

ஆவும் ஆனியர் பார்ப்பன மக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணிக்
காப்பான் யானைச் செந்நிற் குன்றத்துக்
கோப்பெருஞ்சோழன் குடிநிலை விளங்க
ஒப்பரும் புகழொடு உயர்ந்தனன் ஆக! (புறநானூறு -186)

நெட்டிமையார் பாடிய, புறநானூற்றுப் பாடலான (பாடல் 9) பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் போர் அறத்தைக் கூறும் அடிகள் இவை. போரின் தொடக்கத்தை பறைஅடித்து பறைச்சாற்றிப் பசுக்களும், அறநெறி வழுவாத அந்தணர்களும், பெண்களும், பிணியுடையவர்களும் பாதுகாப்பாக (பேணி) செல்லுங்கள் என்றத் தகவலானது அறிவிக்கப்படுகிறது.

### ஆற்றுப்படையும் தகவல் தொடர்பும்

ஆற்றுப்படை நூல்கள் சங்க காலத்தின் பயண வழிகாட்டி இலக்கியங்களாக மட்டுமல்லாமல் தகவல் மேலாண்மை ஆவணங்களாகவும் சமூக ஊடகங்களின் முன்னோடிகளாகவும் விளங்குகின்றட்ன. நவீன காலத்தில் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் எவ்வாறு சமூகத்தை இணைக்கின்றனவோ, அதேபோல் சங்க காலத்தில் ஆற்றுப்படை நூல்கள் தகவல் பரிமாற்றத்தின் மைய ஊடகங்களாக செயல்பட்டன.

ஆற்றுப்படை என்ற சொல், வழி காட்டுதல்" என்ற பொருளுடன் தகவலை யாருக்காக, எதற்காக, எவ்வாறு என்று தகவலை நிர்ணயிக்கும் தகவல் மேலாண்மை அமைப்பைக் காட்டியுள்ளது. இதனால் ஆற்றுப்படை நூல்கள் கூயசபநவ- Oriented Communication இலக்கியங்களாக விளங்குகின்றன.

ஆற்றுப்படை நூல்கள், பயணத்திற்கு தேவையான முழுமையான தகவல் தொகுப்பை வழங்குகின்றன. பயண வழிகள், நிலப்பரப்பு (மலை, காடு, வயல், கடல்) இடைநிலையிலான ஆபத்துகள், உணவு, நீர், ஓய்வு கிடைக்கும் இடங்கள் இவை அனைத்தும் முன்திட்டமிட்ட தகவல் பரிமாற்றம் (Pre-planned Communication) என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக ஆற்றுப்படை நூல்கள் விளங்குகின்றன.

திருமுருகாற்றுப்படை என்பது சங்க இலக்கியத்தின் பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று முருகனைப் புகழ்ந்து, அவன் அருளைப் பெற வழி காட்டும் ஆற்றுப்படுத்தும் வரிகள் பல உள்ளன.

முருகாற்றுப்படை" எனும்போது, வீடு பெறுதற்குப் பக்குவமடைந்த ஒருவனை வீடு பெற்ற ஒருவன் வழிப்படுத்துவது எனப் பொருள்படும் என்பது நச்சினார்க்கினியர் கூற்றாகும்.

**சேவடி படரும் செம்மல் உள்ளமொடு**
**நலம்புரி கொள்கைப் புலம்புரிந் துறையும்**
**செலவுநீ நயந்தனை யாயின், பலவுடன்**
**நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப**
**இன்னே பெறுதிநீ முன்னிய வினையே**

(திருமுருகாற்றுப்படை. 62 -66)

இவை முருகனை நாடிச் செல்ல மனதை ஆற்றுப்படுத்தும் வரிகளாக அமைகின்றன.

ஆற்றுப்படுத்துபவர் தாம் நேரில் கண்டதை, அனுபவித்ததை, உறுதி செய்ததை மட்டுமே ஆற்றுப்படுத்துகிறார். அவர் ஆற்றுப்படுத்தும் தகவல் நம்பகத்தன்மை (Credibility), உண்மைத் தன்மை (Authenticity), பயன்தன்மை (Utility) ஆகிய பண்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கிகின்றன். இது நவீன தகவல் தொடர்பில் கூறப்படும் Experiential Knowledge Sharing முறைக்கு இணையானதாகும்.

ஆற்றுப்படைநூல்கள், தனிநபர் தொடர்பை மட்டுமின்றி கலைஞர்கள் (பாணர், கூத்தர்), அரசர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கிடையேயான தகவல் வலையமைப்பை (Communication Network) உருவாக்கின. ஒரு வள்ளலின் புகழ், கொடை, அரசியல் நிலை ஆகியவை வாய்மொழி ஊடகத்தின் மூலம் பரவியமைக்கு ஆற்றுப்படைகள் முக்கியக் காரணமாக இருந்தன.

சங்க இலக்கியத்தின் பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று. இதில் வறுமையில் வாடும் சிறுபாணனை, மற்றொரு சிறுபாணன் நல்லியக்கோடனிடத்து ஆற்றுப்படுத்துகிறான்.

நைவளம் பழுநிய நயம் தெரி பாலை
கை வல் பாண்மகன் கடன் அறிந்து இயக்க,
இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇ,
துனி கூர் எவ்வமொடு துயர் ஆற்றுப்படுப்ப,
முனிவு இகந்திருந்த முது வாய் இரவல!

(சிறுபாணாற்றுப்படை. 36-40)

ஆற்றுப்படை நூல்களில் ஆற்றுப்படுத்துவோர் பொய் வாக்குறுதி அளிக்காது, பெறுபவரின் நலனை முன்னிலைப் படுத்தி ஆற்றுப்படுத்தினர். இவை Ethical Communication என்ற மேலாண்மைச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றன.

### நவீன தகவல் தொடர்பு மேலாண்மையுடன் சங்க இலக்கியக் கருத்துக்களை ஒப்பிடுதல்

ஆற்றுப்படைநூல்கள், நவீன Communication Theories உருவாகுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, தகவல் அமைப்பு, நோக்குத் தெளிவு, உளவியல் புரிதல், அறநெறி கட்டுப்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைத்த தகவல் தொடர்பு மாதிரிகளாக விளங்குகின்றன.

எனவே, ஆற்றுப்படைநூல்கள் Pre-Modern Communication Theory Texts எனக் கூறலாம்.

### ஒப்பீட்டு அட்டவணை

| | |
|---|---|
| New Communication Theory | ஆற்றுப்படை நூல்கள் |
| Shannon-Weaver Model | அனுபவம் பெற்ற வழிகாட்டி |
| Strategic Communication | குறிப்பிட்ட வள்ளல் நோக்கம் |
| Knowledge Management | அனுபவ அறிவு பகிர்வு |
| Motivational Communication | நம்பிக்கை ஊட்டும் பாடல் |
| Cognitive Mapping | நில வரிசை விளக்கம் |
| Network Theory | கலைஞர் தகவல் வலையம் |
| Ethical Communication | அறநெறி வழிகாட்டுதல் |

என சுருக்கமாக ஆற்றுப்படைநூல்கள் நவீன தகவல் தொடர்புக்கான முன்னோடிகளாக இருந்ததை அட்டவணைப் படுத்தலாம்.

**நிறைவாக**

நவீன காலத்தில் தகவல் தொடர்பு ஒரு தனித்துறை (discipline) ஆக வளர்ந்துள்ள நிலையில், அதன் அடிப்படைச் சிந்தனைகள் சங்க காலத்திலேயே சமூக நடைமுறையாக இருந்துள்ளன ஆற்றுப்படைநூல்கள் இலக்கு சார்ந்த தகவல் தொடர்பு (Goal-Oriented Communication) என்ற நவீன மேலாண்மைச் சிந்தனையைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

ஆற்றுப்படை நூல்கள் இலக்கு சார்ந்த தகவல் தொடர்பு (Goal-Oriented Communication) என்ற நவீன மேலாண்மைச் சிந்தனையைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

இவ்வாய்வுக்கட்டுரை, சங்க இலக்கியங்களை இலக்கிய ஆய்வின் எல்லைக்குள் மட்டுமே பார்க்கும் போக்கைத் தாண்டி, மேலாண்மை, தொடர்பியல், உளவியல், பண்பாட்டு ஆய்வு போன்ற இடைத்துறை (ஐவேநசனளைஉயைீடலையேசல) மேலாய்வுக் களன்களுக்கான புதிய வாய்ப்புகளை நோக்கச் செய்வதாக அமைகிறது.

**பார்வை நூல்கள்**


1. *கந்தையா, ந.சி. தமிழர் பண்பாடு, காமராஜ் பதிப்பகம். சென்னை, 1966.*
2. *சுப்பிரமணியன், கா., சங்கக் கால சமூகம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1987.*
3. *சேதுப்பிள்ளை, ரா.பி. ஊரும்பேரும், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1997.*
4. *சோமலே, தமிழ்நாட்டு மக்களீன் மரபும் பண்பாடும், நேசனல் புக் டிரஸ்ட் இந்தியா, பாரி நிலையம், சென்னை, 1974*

5. பிள்ளை, கே.கே. தமிழக வரலாறு மக்களும் பண்பாடும். தமிழ்நாட்டு பாடநூல் நிறுவன வெளியிடு, 1972

6. வரதராசனார், மு, தமிழிலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி புதுடெல்லி, 1972

7. வேங்கடசாமி, மயிலை, பழங்காலத் தமிழர் வாணிகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1974.